**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 25/2010** **நாள்.20.04.2022**

2022ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20ம் நாள் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜானகிராமன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வரதப்பநாயக்கர் | சாதி | |
| கிராமம் | சென்னை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 71 |

**பி.சா.1**

**குறுக்கு விசாரணை**

பெருமாள் நாயக்கர், குள்ளம்மாள், மாணிக்கம், சிவபாக்கியம் ஆகியோர் வரதப்பநாயக்கரின் உடன் பிறந்தவர்கள் ஆவார். என் தந்தைக்கு எவ்வளவு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பாக வழக்கு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் எவ்வளவு சொத்து சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் அதிகம் உள்ளதா அல்லது விடுபட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. என்அப்பா மீது என் சித்தப்பா பெருமாள் நாயக்கர் வழக்கு அ அட்டவணை சொத்து சம்பந்தமாக பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி சொத்து வக்ப் சொத்து யாருக்கு சொந்தம் கிடையாது என்று முடிவானது. மேற்படி வழக்கு சொத்து வீட்டில் அனுமதியின் பேரில் பெருமாள் நாயக்கர் குடியிருந்தார். பின்னர் அந்த வீடு எனக்கு சொந்தமானது என்று வழக் கு தாக்கல் செய்தார். அது தள்ளுபடி செய்யப்பட்டது. என் சித்தப்பா நிலம் சம்பந்தமாக எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. என் தந்தைக்கு தெய்வானை, ரூக்குமணி, ஜெகதீஸ்வரி அக்காக்கள், நானும் வாரிசுகள். மேற்படி தெய்வானை என்பவருக்கு விழுப்புரம் மாவட்டம் சிந்தாமணி கிராமத்தில் உள்ள ஜெயராமன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். ரூக்குமணி என்பவரை சென்னையில்திருமணம் செய்து கொடுத்தார்கள். மேற்படி ரூக்குமணி மகள் தான் 3ம் பிரதிவாதி மாலா ஆவார். வாதி ஜெகதீஸ்வரியை , தெய்வானை என்பவரின் கணவரின் தம்பி கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். 5 முதல் 7 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஆவார். வழக்கு அ அட்டவணை சொத்து வாதி தெய்வானை, 3ம் பிரதிவாதி மாலா, ஆகியோர் எடுத்துக்கொள்ளலாம் என்றால் அதில் உள்ள வீட்டை மனை

மட்டும் என் சகோதிரிகள் எடுத்துக்கொள்ளலாம். அந்த மனையில் எனக்கு பாகம் வேண்டாம். நிலத்தை என் மகன் நவீன்க்கு என் தந்தை வாய்மொழியாக கொடுத்துள்ளார். ஆவணம் எழுதிகொடுக்கவில்லை. என் தந்தை சொத்து சம்பந்தமாக ஆவணம் எதையும் எழுதிவைக்கவில்லை. வழக்கு அ அட்டவணை சொத்தில் உள்ள மாமரம் உள்ள சொத்து என் மகனுக்கு சேரவேண்டும் என்பது என் தந்தையின் விருப்பமும், எனது விருப்பமும் ஆகும். என் தந்தையின் மீது பெருமாள் நாயக்கர் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பெருமாள் நாயக்கரை வீட்டில் இருந்து அப்புறப்படுத்த வாதியின் கணவர் ஜெயராமன், தெய்வாணையின் கணவர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உதவியாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா 1990 ம் ஆண்டு இறந்துவிட்டார். என் தாயார் என் அப்பா இறப்பதற்கு 5 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார். என் தந்தை சென்னை மாநகராட்சியில் ஊழியராக இருந்தார். என் தந்தை அவர் பணியில் இருந்து சம்பாதித்த வருவாய் மற்றும் வழக்கு அ அட்டவணை சொத்தில் இருந்து கிடைத்த வருவாய் ஆகியவற்றை கொண்டு வழக்கு ஆ அட்டவணை சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் வீடு கட்ட ரூபாய் 15000 லோன் வாங்கினார். என் தந்தை லோன் வாங்கிய ரூபாய் 15000 மற்றும் அவர் வைத்திருந்த வருவாய் ஆகியவற்றை கொண்டு வீடு கட்டினார் என்றால் சரிதான். என் தந்தை சென்னையில் இருக்கும் போது தான் என் சகோதிரிகளுக்கு திருமணம் செய்துகொடுத்தார். என் தந்தை கட்டிய வீட்டின் ஒரு அறையில் வாதி இருந்தார் என்றால்சரியல்ல. அ அட்டவணை சொத்தை ஏழுமலை என்ற நபர் பார்த்து கொண்டு இருக்கிறார். அதன் வருவாய் விவரங்கள் எனக்கு தெரியாது. எனக்கும் என் சகோதிரிகளுக்கும் என் தந்தை தான் திருமணம் செய்து வைத்தார். என் சகோதிரி ரூக்குமணி என்பவர் 3 ம் பிரதிவாதி மாலா, சிறு வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். எனக்கு நிரந்தர வேலையும் இல்லை, நிரந்தர வருவாயும் இல்லை. அ அட்டவணை சொத்தின் உள்ள வீட்டின் மதிப்பு தெரியாது. நிலத்தின் வருவாயை பழனிச்சாமி என்பவர் பார்த்து வந்து வருவாயை என் தந்தையிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அ அட்டவணை சொத்தில் உள்ள வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டு , மாதம் ரூபாய் 50,000 வருவாய் வருகிறது என்றால் சரியல்ல. வீடு வக்ப் போர்டுக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வீடு வக்ப் போர்டுக்கு சொந்தமானது இல்லை என்றாலும் என் தந்தைக்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல. வக்ப் போர்டுக்கு சொந்தமில்லை என்பதால் தான் அதன் பேரில் ரூபாய் 15000 கடன் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வக்ப் போர்டு ஆட்சேபனை இல்லை என்று சான்றிதழ் கொடுத்தார்கள். பாகம் கொடுக்க கூடாது என்பதற்காக மேற்படி வீடு வக்ப் போர்டுக்கு சொந்தமானது என்று தவறாக கட்சி ஆடுகிறேன் என்றால் சரியல்ல. வீடு வக்ப் போர்டுக்கு சொந்தம் என்று நிலம் வேறு நபர்களிடம் உள்ளது என்றும் வாதிக்கு பாகம் கிடைக்ககூடாது

என்பதற்காக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வீட்டிற்கு ஏற்கனவே மின் இணைப்பும் , வீட்டு வரி ரசீதுகளும் என் தந்தை பெயரில் இருந்தது. என் பெயரில் உள் ள வீட்டு வரி ரசீதுகளை என் வழக்கறிஞர் இடம் கொடுத்துள்ளேன். என் தந்தை இறந்த பிறகு வீட்டு ரசீதை என் பெயரில் வாரிசு சான்றிதழ் வாங்கி தான் மாற்றினேன். என் தந்தையின் வாரிசு சான்றிதழில் என் பெயர் மட்டும் தான் வாரிசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாரிசு சான்றிதழை என் வழக்கறிஞர் இடம் கொடுத்துள்ளேன். என் தந்தையின் வாரிசு சான்றிதழில் பெண் வாரிசுகளை சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் தந்தை ரூபாய் 15000 கடன் வாங்கியபோது நான் மட்டும் தான் வாரிசு என்று குறிப்பிட்டு கடன் வாங்கினார். அந்த கடனை நான் தான் அடைத்தேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞர் இடம் கொடுத்துவிட்டேன். வாரிசு சான்று சென்னையில் வாங்கினேன்.

(மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக காலஅவகாசம் கோரியதால் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது).